

நாமக்கல் மாவட்டம் நாமகிரிப்பேட்டை இரா. புதுப்பட்டி பேரூரில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தி.மு.க. வேட்பாளராக போட்டியிடும் டாக்டர் மா. மதிவேந்தன் சத்தியா நகர், புதியார், பேருந்து நிலையம், முச்சிப்பள்ளி புதியார், மலைவாழ் காலனி, சக்தி நிலையம், பெருமாள் கோவில் தெரு, நீங்கலாங்காடு, வாணி கிணறு, எஸ்.பாறை மற்றும் ஆர்.பி.காட்டூர் ஆகிய கிராமங்களில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இந்நிகழ்வில், ராசிபுரம் தனி தொகுதி தேர்தல் பார்வையாளர் நன்னியூர் ராஜேந்திரன், இரா.புதுப்பட்டி பேரூர் செயலாளர் ஜெயக்குமார் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### ஒன்றிய அரசின் தொகுதி மறுவரையறைக்கு எதிர்ப்பு தெரிவித்து

# எடமலைப்பட்டி புதூரில் கருப்புக் கொடி மசோதா நகல் எரிப்பு!

## அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் தி.மு.க.வினர் போராட்டம்!

திருச்சி, ஏப்.18-

சிறப்பு நாடாளுமன்ற கூட்டத்தொடரில் ஒன்றிய அரசு தொகுதி மறு வரையறை மசோதாவை கொண்டு வர உள்ளது. மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை மேற்கொள்ளும் வகையில் அந்த மசோதா உள்ளது. இது நிறைவேற்றப்பட்டால் மக்கள் தொகையை கட்டுப்பாட்டில் வைத்துள்ள தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்கள் பாதிக்கப்படும் வடமாநிலத்தை விட தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களுக்கு பிரதிநிதித்துவம் குறையும் என்று கூறி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டுவரவுள்ள தொகுதி மறு வரையறைக்கு எதிர்ப்பு தெரிவித்து பொது மக்கள் தங்கள் இல்லங்களில் கருப்பு கொடி ஏற்றி தங்களது எதிர்ப்புகளை வெளிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தார்.

அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக துறை அமைச்சரும் தி.மு.க.வின் முதன்மை செயலாளருமான கே.என்.நேரு தலைமையில் தி.மு.க.வினர் திருச்சி எடமலைப்பட்டி புதூர் பகுதிகளில் இரண்டு இடங்களில் கருப்புக் கொடி ஏற்றியும் மசோதா நகலை எரித்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் கே.என்.நேரு,

தொகுதி மறு வரையறை என்கிற பெயரில் தமிழ்நாட்டின் மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை குறைக்க பார்க்கிறார்கள். ஒன்றிய அரசின் அறிவுறுத்தலின்படி குடும்ப கட்டுப்பாட்டை சரியாக கடைப்பிடித்ததால் தான் தமிழ்நாடு மக்கள் தொகையை கட்டுப்படுத்தியது ஆனால் அதை. வைத்து இன்று தமிழ்நாடு பாதிக்கக் கூடிய வகையில் தொகுதி மறுவரையறையை செய்கிறார்கள். இதை கண்டித்து தான் இன்று கருப்புக் கொடி ஏற்றி உள்ளோம்.

அ.தி.மு.க. ஏற்கனவே குடியுரிமை திருத்த சட்டத்தை ஆதரித்தார்கள், வேளாண் சட்டத்தை ஆதரித்தார்கள் அவர்கள் ஆதரிக்கவில்லை என்றால் அந்த சட்டங்கள் நடைமுறைக்கு வந்திருக்காது தற்பொழுது தொகுதி மறு வரையறை புதிய சட்டத்தையும் ஆதரிக்கிறார்கள் இதனால்தான் அ.தி.மு.க.வை பா.ஜ.க. விடம் அடகு வைத்து விட்டார்கள் எனக் கூறுகிறோம். அதற்கு எடப்பாடி பழனிச்சாமி கோபித்துக் கொள்கிறார் என்றார்.

பேட்டியின் போது மாநகர செயலாளர் மாவட்ட துணை செயலாளர் முத்துசெல்வம் விஜயாஜெயராஜ், டோல்கேட் சுப்பிரமணி சோழன் சம்பத் முத்து பழனி தொமுசாமைப்பாளர் குணசேகர்உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. ஆட்சியில் கல்வி முதல் அனைத்துத் துறைகளிலும் அபார சாதனை!

# தமிழ்நாட்டைக் காக்க மீண்டும் தலைவர் மு.க.ஸ்டாலினை முதல்வராக்குவோம்!

## நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி ஓவியம் பிரச்சாரம்!

சென்னை, ஏப்.18-

திராவிட மாடல் ஆட்சியில் கல்வி முதல் அனைத்துத் துறைகளிலும் அபார சாதனைகளை நிறைவேற்றியுள்ளது எனவும், தமிழ்நாடு தலைகுனியாமல் காத்திட நமது திராவிட மாடல் அரசின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீண்டும் ஆட்சிப் பொறுப்பினைத் தொடர்ந்திட பாடுபடுவோம் என நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்திருப்பதாவது:-

தி.மு.க. ஆட்சியில் கல்வி தரம் உயர்த்திருப்பதற்கு இதைவிட சான்று உள்ளதா?



எல்லா மாநிலமும் திரும்பிப் பார்க்க வைக்கும் அளவிற்கு அரசு பள்ளிகள் தனியார் பள்ளிகளுக்கு நிகராக தரம் உயர்த்தப்பட்டுள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது.

சென்னை அரசுப் பள்ளிகளில் குழு செயல்பாடுகள் மூலம் கற்பித்தல், மாணவர்கள் செய்தித்தாள் வாசித்தல், விளையாட்டின் மூலம் கற்பித்தல், செயல் வழிமுறை மூலம் கற்பித்தல், வண்ணம் தீட்டுதல் மூலம் சுகாதாரத்தை கற்பித்தல், மின்னணு தொடுதிரை மூலம் கற்றல், தற்காப்பு கலை, பாலின சமத்துவ கல்வி, 4 மற்றும் 5-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச கல்வி சுற்றுலா, தீ விபத்து விழிப்புணர்வு, தையல் பயிற்சி என தனியார் பள்ளிகளுக்கு இணையாக திராவிட மாடல் அரசில் மாணவர்களின் கல்வித்தரம் பல மடங்கு உயர்ந்துள்ளது.

தேசத்தை காக்க, ஜனநாயகத்தை மீட்க, சிறுபான்மையினரை பாதுகாக்க, பெண்கள் நலமுடன் வாழ, திராவிட நல் திருநாடு முன்னோடியாக விளங்க மதச்சார்பற்ற அடையாளத்தை பாதுகாப்பதிலும், சிறுபான்மையினரின் உரிமைகளை உறுதி செய்வதிலும், தமிழ்நாடு எந்த சூழ்நிலையில் தலை வணங்காது, பின்னடையாது.

போராடி வெற்றி பெறுவோம். இது மக்களாட்சி! சொல்லல்ல செயல் .வாக்களிப்பீர் உதயசூரியனுக்கு

இவ்வாறு தொகுதி வாரியாக நமது திராவிட இயக்கத்தின் தலைவர் திருமதி. ஓவியம் அவர்கள் பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார்.



2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு நாமக்கல் மேற்கு மாவட்டம் பரமத்தி வேலூர் மற்றும் திருச்செங்கோடு தொகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் தி.முக. சார்பில் போட்டியிடும் பரமத்தி வேலூர் தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் கே.எஸ். மூர்த்தியை ஆதரித்து பரமத்தி வேலூர், கபிலர்மலை, கந்தம்பாளையம் ஆகிய பகுதிகளிலும் திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதியில் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரனுக்கு ஆதரவாக வையப்பமலை மற்றும் திருச்செங்கோடு பழைய பேருந்து நிலையம் அண்ணா சிலை அருகே நடைபெற்ற பிரச்சார கூட்டங்களில் கழக கொள்கை பரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டார். இப் பிரச்சாரக் கூட்டத்தில் ஒன்றிய செயலாளர்கள் தனராசு, தங்கவேல், தளபதி சுப்பிரமணியம்,,லலித் குமார், சரவணகுமார், சாமிநாதன், பழனிவேல், ராமசாமி, வட்டூர் தங்கவேல், அருண், நகரக் கழக செயலாளர்கள் நடேசன், கார்த்திகேயன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# நூற்றுக்கு நூறு; மாற்றேது கூறு!

வாக்களிக்கும் தேர்தல் நாள்
வருகிறது விரைவாக!
வாக்குறுதி தளபதிதான்
வழங்குகிறார் நிறைவாக!
தேக்குறுதி மனங்கொண்ட
திமுக தொண்டர்காள்!
தீக்கங்குல் போல்நீங்கள்
திசையெங்கும் பரவுங்கள்,
ஈர்க்குச்சி எதிரிகள்
இல்லாமல்
உரசுங்கள்!
காக்கைகளாய் எங்கெங்கும்
கரைகின்றார் உங்களின்
சீழ்க்கைஒலி போதுமே,
சிதறுண்டு
போகுமே!

பூக்கமழும் தமிழ்நாட்டைப்
பொழில்கள்சூழ் நாடாக்கிக்
காக்கின்ற தொண்டினைக்
கண்ணுறக்கம் இல்லாமல்
மேற்கொண்டு செய்கின்ற,
வீரமகன் தளபதி
ஆக்கிய ஆட்சிதான்
அடுத்தினியும் தொடர்ந்திடத்
தூக்கிய கைகளுடன்
தோளுயர்த்தி
வாருங்கள்!
ஊக்கிய தளபதிக்கே
உயர்வெற்றி கூறுங்கள்!
தாக்கவரும் மதவெறியர்
தாள்பிடிக்கும் அடிமைகள்
காக்கவரும் வேடத்தில்
களவாடப் பார்க்கின்றார்;
தேக்கிய வெள்ளத்தைத்
திறந்துவிட்டாற் போலவே
வாக்குகள் பாயட்டும்
வாகைநமக்கு ஆகட்டும்!

போக்கியே வடபுலத்துப்
பொய்வேடர் ஓட்டிடத்
தீக்கனலாய்ச் சேருங்கள்;
தேர்தலெனும் வேள்வியில்
ஆக்குங்கள் சாம்பலாய்!
ஆயிரம்பல் ஆயிரம்
கூக்குரல் இட்டாலும்
கும்பிட்டுத் தொழுதாலும்
கேட்கத்தான் ஆளில்லாக்
கீழேவல் அடிமைகள்
வாக்கின்றிப் போகட்டும்
வறண்டமண் ஆகட்டும்!

ஆக்கந்தான் காண்பதற்கு
அரியணை ஏறுதற்கு
ஊக்கந்தான் குன்றாமல்
ஒவ்வொரு நொடியுமே
தூக்கந்தான் போனாலும்
துவளாதீர்;
சோராதீர்!
ஏக்கமுறும் மக்களின்
எதிர்காலம் வளமாக
நோக்கமுள்ள தளபதிதான்
நூற்றுக்கு நூறுபெற
வாக்களிக்க வாருங்கள்;
வளர்உதய சூரியன்
காக்கத்தான் எழுகின்றான்
காரிருள் அழிக்கின்றான்
நீக்குகின்றான்
அயர்வினை!
நீட்டுகின்றான் உயர்வினை!

மாக்களாய் மக்களை
மடமையில் வீழ்த்துகின்ற
போக்கிரிகள் வடநாட்டுப்
பொய்யர்தம் கையர்கள்
நாக்கிலே நரம்பின்றி
நாற்றமான புளுகுகளைச்
சாக்கிலே அவிழ்க்கின்றார்
சனாதனம் அளக்கின்றார்
மூக்கிலே வேர்க்கின்றார்
முழங்கித்தான் பார்க்கின்றார்!

கோலிகள் விளையாடும்
கோமாளி விடலைகளும்
கூலிகள் வாங்கியே
குத்தாட்டம் போடுகிற
காலிகளும் வைத்திங்கே
காவிகள்செய் கூத்துகள்
கேலிகளாய் மாறிடும்
கேளிக்கை ஆகிடும்!

பேராசிரியர்
**மா.செல்வராசன்**

போலிகளை நம்பியே
போரிட வந்துள்ளார்
வாலிழந்த குரங்காக
வைக்கின்றார் ஒப்பாரி!
நூலிழையும் மாறாது
நுணல்கூச்சல் வேகாது!

காலிழந்தான் ஓடுதல்போல்
கண்ணிழந்தான்
ஆடுதல்போல்
நாவிழந்தான் பாடுதல்போல்
நலமிழந்தான் வாழுதல்போல்
வேலிழந்தான் போரிடற்போல்
விதையில்லான்
ஏரிடற்போல்
கோலிழந்தான் ஆளுதல்போல்
கொடுங்கோலைக்
கொண்டிருப் போர்
கால்வீழ்ந்து கிடக்கின்ற
கருத்தில்லாக்
கபோதிகள்
வேலியாயின்
தோட்டத்தை
மேய்ந்துவிடும்
கூட்டங்கள்!

ஈக்களாய்க் கொசுக்களாய்
இடர்தரும் இவர்களைத்
தோற்கடிப்போம்!
தடமின்றித்
தொலைத்திடுவோம்,அதனாலே
சாக்காட்டைத் தேடுவார்,
தாள்போட்டு மூடுவார்;
பூக்காட்டைக் காட்டுவோம்,
புத்தாட்சி நாட்டுவோம்
வேக்காடு போனதென
வெற்றியைக் கூட்டுவோம்!

சிந்திக்கத் தெரிந்தவரே,
திரும்பித்தான்
பாருங்கள்!
அந்தநாள் முதலாக
அடுகடுக்காய்த்
தடைகளை
அறமின்றி எழுப்பியே
பிந்திநமைத் தள்ளுதற்குப்
பெருமுயற்சி செய்கின்றார்
விந்தியத்தின் மேலிருந்து
விளையாடும்
வினையாளர்!
இந்தபல கேடுகளை
எடுத்துரைத்தே அண்ணாதான்
சொந்தநாடே
சுரண்டுகிற
சூழ்ச்சியை வீழ்ச்சிசெய
இந்திமுதல் எத்தனையோ
இடர்களை ஒழித்திடச்
சிந்துபாடி எழுந்தவர்
தீட்டிய திராவிடமே
இந்தநாள் தளபதியின் இலக்க
ணமாம்! தேர்தலில்
முந்துவார்நம்
முத்துவேல் கருணாநிதி
ஸ்டாலின்எனத்
துந்துபி எழுப்புவோம்;
தோள்தட்டி முழங்குவோம்!
வந்தது பெருவெற்றி
வாழ்கவெனப் பாடுவோம்!



நாகை மாவட்டம் திருமருகல் வடக்கு ஒன்றியம் கொங்கராயநல்லூர் ஊராட்சியில் நாகை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லாவை ஆதரித்து பிரச்சாரம் தொடங்கி வைப்பதற்கு முன்னதாக ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள தொகுதி மறுவரையறையை எதிர்த்து நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் கருப்பு சட்டை அணிந்து கருப்புக் கொடி ஏற்றி கருப்பு சட்ட நகலை எரித்தார். உடன் நாகை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் எம்.எச்.ஜவாஹிருல்லா, நாகை மாவட்டக் கழக அவைத் தலைவர் ப.செல்வம் திருமருகல் வடக்கு ஒன்றியக் கழக செயலாளர் செல்வ.செங்குட்டுவன் மற்றும் கூட்டணி கட்சியினர் உள்ளனர்



தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசு மகளிர் இட ஒதுக்கீடு மசோதா என்ற பெயரில் பாராளுமன்றத்தில் ஒன்றிய பாஜக அரசால் கொண்டு வரப்படும் நாடாளுமன்றத் தொகுதி மறு சீரமைப்பு அரசியலமைப்பு திருத்த மசோதாவைக் கண்டித்து சேலம் கிழக்கு மாவட்டம், நரசிங்கபுரம் நகர தி.மு.க, செயலாளர் என்.பி. வேல்முருகன் இல்லத்தில் கருப்புக் கொடி ஏற்றப்பட்டது. உடன் நகர மன்ற தலைவர் அலெக்சாண்டர், இளவரசு , வெங்கடேஷ், அசோக், செல்வகுமார், ஞானம் மற்றும் நகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.